பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

14 02 2026 SATURDAY 12 40 PM

ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- தேசிய நெடுஞ்சாலையை, அவசர காலங்களில் விமான ஓடுதளமாக பயன்படுத்தும் வசதியை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அஸ்ஸாமில் தொடங்கி வைத்தார்.
- அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் காரணமாக, நமது விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.
- புல்வாமா தாக்குதல் நினைவுதினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.
- ஈரானில் அதிகார மாற்றம் ஏற்படுவது, அந்நாட்டிற்கு நன்மை பயக்கும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.
- உலக பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, 6 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<

தேசிய நெடுஞ்சாலையை, அவசர காலங்களில் விமான ஓடுதளமாக பயன்படுத்தும் வசதியை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அஸ்ஸாமில் தொடங்கி வைத்தார்.

திப்ருகர் மாவட்டத்திற்கு உட்பட்ட Morgan விரைவுச் சாலையில் இந்த வசதியை தொடங்கி வைத்த பிரதமர், விமானப்படையின் சாகச நிகழ்ச்சியையும் பார்வையிட்டார்.

வடகிழக்கு மாநிலங்களில் முதல்முறையாக இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விமானப் படையுடன் ஒருங்கிணைந்து இந்த சாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>><<<<<

மக்களின் எதிர்பார்ப்புகளை மத்திய பட்ஜெட் நிறைவேற்றியுள்ளதாக தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதற்கான அம்சங்கள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றிருப்பதை சுட்டிக்காட்டினார்.

கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 12 லட்சத்து 21 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

>>>>>><<<<<

சாலை விபத்துகளால் பாதிக்கப்படுபவர்களுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் வரை இலவச அவசர சிகிச்சை வழங்குவதற்கான திட்டத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், விபத்துகளால் பாதிக்கப்படும் குடும்பத்தினருக்கு நிதிச்சுமையை இது பெரிய அளவில் குறைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

பிரதமருக்கான புதிய அலுவலகத்தில் நான்கு முக்கிய திட்டங்களுக்கு பிரதமர் ஒப்புதல் அளித்துள்ளது வளர்ச்சிப் பணிகளுக்கு மேலும் உத்வேகம் அளித்துள்ளதாக மூத்த பத்திரிகையாளர் வெங்கடேஷ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - வெங்கடேஷ் 1.30 நிமிடம்)

>>>>>><<<<<

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் காரணமாக, நமது விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த ஒப்பந்தம் குறித்து உண்மைக்குப் புறம்பான செய்திகளை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி பரப்பி வருவதாக குற்றம் சாட்டினார்.

தொழில்துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இந்த ஒப்பந்தம் உதவிடும் என்றும் அமைச்சர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான உச்சிமாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த மாநாடு புதுதில்லியில் நாளை மறுநாள் தொடங்கி வரும் 20ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான அனைத்து அம்சங்கள் குறித்து, இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

30 நாடுகளைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிறுவனங்கள் இதில் பங்கேற்கவுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>><<<<<

பணியிடங்களில் பெண்களுக்கான பாதுகாப்பு குறித்த தேசிய மாநாடு, புதுதில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது.

மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி. சாவித்ரி தாக்கூர் இதில் பங்கேற்றுள்ளார்.

பணியிடங்களில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அம்சங்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<

புல்வாமா தாக்குதல் நினைவுதினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதனையொட்டி குடியரசுத் துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. அமித் ஷா, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மற்றும் பலர் விடுத்துள்ள செய்தியில், தீவிரவாதம் வேரோடு ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

>>>>>><<<<<

தீவிரவாதத்தை ஒழிக்கவும், அமைதியை நிலைநாட்டவும் நாட்டு மக்கள் அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கோவை தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுவதை ஒட்டி, அவர் வெளியிட்டுள்ள செய்தியில் இதனை தெரிவித்துள்ளார்.

1998-ஆம் ஆண்டு இதேநாளில், இந்த தொடர் குண்டுவெடிப்பு சம்பவம் நிகழ்ந்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நாளையொட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், இஸ்லாமிய பயங்கரவாதிகள் நிகழ்த்திய குண்டுவெடிப்பில் அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்நாள் கறுப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு வருவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான கூட்டணியில், ஆட்சியில் பங்கு கோருவது தங்களது உரிமை என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. மாணிக்கம் தாகூர் கூறியுள்ளார். சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், அதிகாரப் பகிர்வு என்பது அவசியம் என்றும் இதனை மக்கள் தீர்மானிப்பார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தேர்தலில் திமுக 170 தொகுதிகளில் போட்டியிடும் என்று மாநில அமைச்சர் திரு. ராஜ கண்ணப்பன் பேசியுள்ளதை சுட்டிக்காட்டி, திரு. மாணிக்கம் தாகூர் இந்த கருத்தை பதிவு செய்துள்ளார்.

>>>>>><<<<<

ஆந்திர அரசின் வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை, இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

நிதியமைச்சர் திரு. Payyavula Keshav இதனை தாக்கல் செய்து உரையாற்றினார்.

பள்ளிக் கல்வித்துறையின் வளர்ச்சிக்காக 32 ஆயிரத்து 308 கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுகாதாரத்துறைக்கு 19 ஆயிரத்து 306 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. Payyavula Keshav கூறினார்.

>>>>>><<<<<

ராஜஸ்தானில் இன்று அதிகாலை நேரிட்ட சாலை விபத்தில் ஒரு பெண் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

மத்தியப்பிரதேசத்திலிருந்து ஜெய்ப்பூர் சென்று கொண்டிருந்த கார், Chaksu அருகே முன்னாள் சென்று கொண்டிருந்த லாரிமீது மோதியதில் விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

கார் ஓட்டுநரின் கவனக் குறைவே இந்த விபத்துக்கு காரணம் என்றும் காவல்தறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

ஈரானில் அதிகார மாற்றம் ஏற்படுவது அந்நாட்டிற்கு நன்மை பயக்கும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

வடக்கு Carolina-வில் அந்நாட்டு பாதுகாப்பு படையினருடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

ஈரானுக்கு எதிராக ராணுவ நடவடிக்கையை மேற்கொள்வது குறித்து பரிசீலித்து வரும் சூழலில், அதிகார மாற்றம் ஈரானுக்கு நன்மை பயக்கும் என்றும் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

>>>>>><<<<<

உலக பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, 6 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

பஹ்ரைனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில், Prem Kumar Ale – Alphia James இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஒற்றையர் பிரிவுகளில் Nitesh Kumar, Sukant Kadam, கிருஷ்ணா நாகர், துளசிமதி முருகேசன் ஆகியோர் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

மகளிர் இரட்டையர் பிரிவிலும், கலப்பு இரட்டையர் பிரிவிலும் இந்தியாவிற்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

>>>>>><<<<<

புரோ ஹாக்கி லீக் போட்டியில், இந்தியா இன்று பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.

ரூர்கேலாவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<

சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 9-11, 11-3, 10-12, 11-7, 11-5 என்ற செட்கணக்கில் Romania-வின் Eduard Ionescu-வை வென்றார்.

>>>>>><<<<<

பிரான்ஸில் நடைபெற்று சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ஆஸ்திரியாவின் Neil Oberleitner இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-5, 7-6 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Martin Damm Junior – செக்குடியரசின் Michael Vrbensky இணையை வென்றது.

>>>>>><<<<<